**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**அசல் வழக்கு எண். 28/2021**

**வா.சா.1**

நாள்: **30.09.2021**

2021ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.ராமமூர்த்தி என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி திரு.ஆர்.சண்முகசுந்தரம், பி.காம்., எல்.எல்.பி., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ராமமூர்த்தி |
| த/பெ / க/பெ | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| ஜாதி | | |
| மதம் | : | |
| வயது | : | |
| தேதி | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கின் 1ம் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 13.07.1970 தேதியில் எனது பாட்டி பார்வதியம்மாள் எனது அப்பா முனி என்ற ரமணிக்கு எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலை ஆவணத்தின் சார்பதிவக அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1. என் அப்பா செலுத்திய தீர்வை ரசீதுகள்

வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ 3 எனது அப்பா பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.4. என் அப்பா இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.5 வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.6. என் அண்ணன் ரவீந்திரநாதன் இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.7. அவரது வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.8. தாவாச்சொத்திற்கு வாதிகள் பெயரில் உள்ள பட்டா நகல் வா.சா.ஆ.9. குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ.10. எனது ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.11. 2 முதல் 4 வாதிகளின் ஆதார் அடையாள அட்டை நகல்கள் வா.சா.ஆ.12 முதல் 14. தாவாச்சொத்திற்குரிய புகைப்படம் வா.சா.ஆ.15. தாவாச்சொத்திற்குரிய வழிகாட்டு மதிப்பீடு வா.சா.ஆ.16. பிரதிவாதிகளுக்கு நானும் மற்ற வாதிகளும் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.17. 2 முதல் 4 பிரதிவாதிகள் அதை பெற்றுக்கொள்ளாமல் திரும்பி வந்த அஞ்சல் உறை வா.சா.ஆ.18 முதல் வா.சா.ஆ.20. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும்.

கு.வி.

பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரில்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.